DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 66/2021 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **ராஜா** |
| Father's Name | : | **இருளாண்டி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 2 து எதிரி சிறையிலிருந்து பி.டி வாரண்டில் ஆஜர்படுத்தப்பட்டார். 1-ம் எதிரி ஆஜர் இல்லை. 1 ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.02.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது கொட்டக்குடி தெருவில் குடியிருந்து பால் வியாபாரம் மற்றும் சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 திருப்பதி என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சாட்சி சீனிவாசன் என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 08.09.2016 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நானும் அ.சா.1 திருப்பதி என்பவரும் சிவகங்கை காந்தி வீதியில் மாவட்ட கூட்டுறவு வங்கி அலுவலகம் முன்பு நடந்து வந்து கொண்டிருந்தோம் என்றும் அப்போது எதிரிகள் TN 59 AK 5834 என்ற காரில் எங்களுக்கு பின்னால் வந்துஇறங்கி எதிரி தங்கராசு என்பவர்வாளை எடுத்து மிரட்டினார் என்றும் பின்பு அவர் அருவாளால் அ.சா.1 திருப்பதியின் தலையை நோக்கி வெட்டினார் என்றும் அவர் விலகியதில் அந்த வெட்டு அவரது சட்டைபையில் பட்டு சட்டையின் காலர்கிழிந்துவிட்டது என்றும் பின்பு எதிரிகள் இருவரும் அ.சா.1 திருப்பதியை வாளால் கழுத்திலும் அவரது வயிற்றிலும் வைத்து மிரட்டி அவரது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.5000/-தை பறித்து கொண்டு சென்றார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்றும் அவருக்கு நான் உதவியாக இருந்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து வழக்கு விபரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறுவிசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.23 10:51:35 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**